

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று மூன்தினம் (5.5.2025) நேரு விளையாட்டரங்கிலுள்ள சென்னை ஒலிம்பிக் அகடமியில் நடைபெற்ற விழாவில், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, சேலம், மதுரை, கடலூர், தருமபுரி, நாகப்பட்டினம், நாமக்கல், திண்டுக்கல், தஞ்சாவூர், திருப்பூர், இராமநாதபுரம், ஈரோடு ஆகிய மாவட்டங்களில் தலா 3 கோடி ரூபாய் வீதம் மொத்தம் 54 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 18 முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கங்கள் கட்டும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துணைத் தலைவர்கள் என்.ராமசந்திரன், அசோக் சிகாமணி மற்றும் முதலமைச்சர் விளையாட்டு விருதாளர்கள், விளையாட்டு வீரர், வீராங்கனைகள், பயிற்றுநர்கள், அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.5.2025) நேரு விளையாட்டரங்கிலுள்ள சென்னை ஒலிம்பிக் அகடமியில் நடைபெற்ற விழாவில், தஞ்சாவூர் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள செயற்கை இழை ஓடுதள பாதை மற்றும் இயற்கை புல்வெளி கால்பந்து மைதானம் ஆகியவற்றை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துணைத் தலைவர்கள் என்.ராமசந்திரன், அசோக் சிகாமணி மற்றும் முதலமைச்சர் விளையாட்டு விருதாளர்கள், விளையாட்டு வீரர், வீராங்கனைகள், பயிற்றுநர்கள், அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## அ.தி.மு.க ஆட்சியை விட நான்கு மடங்கு அதிகமான சாதனை:

# ‘திராவிட மாடல்’ ஆட்சியில் 4 ஆண்டுகளில் ரூ.545 கோடியில் விளையாட்டுத் துறைக்கு ஏராளமான உள்கட்டமைப்பு வசதிகள்!

## சென்னை நேரு விளையாட்டு அரங்கில் நடைபெற்ற விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, மே 7 -**

**சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் நடைபெற்ற விழாவில், `முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம்' திட்டத்தின் கீழ், 18 சட்டமன்றத் தொகுதிகளில் தலா ரூ.3 கோடி செலவில் புதிதாக விளையாட்டு அரங்குகளை அமைக்க, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார். இந்த விழாவில் காணொலிக் காட்சி வாயிலாக அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.**

அப்போது அவர் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு, நம் விளையாட்டுக் கட்டமைப்பை வலுப்படுத்த, அடுத்த 20 ஆண்டுகளில் செய்ய வேண்டிய பணிகளை நான்கே ஆண்டுகளில் செய்து முடித்துள்ளது என்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது உத்தரவின் பேரில், நம் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பாக நடைபெறுகிற இந்த சிறப்பான நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாடு விளையாட்டுத்துறை வரலாற்றில் இன்று ஒரு முக்கியமான, மறக்க முடியாத நாள். இன்று விளையாட்டுத் துறையில் தேசிய, சர்வதேச அளவில் சாதனை படைத்த வீரர்கள், பயிற்சியாளர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் விளையாட்டு நடுவர்கள் என 39 பேருக்கு முதலமைச்சர் விருதுகள், பரிசுத்தொகையை வழங்க இருக்கிறோம்.

### 3 கோடியே 70 லட்சம் ரூபாய்

இவைத் தவிர, 21 முன்னாள் விளையாட்டு வீரர்கள் மற்றும் உயிரிழந்த 5 விளையாட்டு வீரர்களின் குடும்பத்தினருக்கு 9 லட்சம் ரூபாய் அளவிற்கு ஓய்வூதிய ஆணை மற்றும் காசோலைகளை வழங்க இருக்கிறோம். தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களிலும் 3 கோடியே 70 லட்சம் ரூபாய் செலவில் ஸ்டார் அகாடமி, அதாவது ஸ்போர்ட்ஸ் டேலண்ட் அண்டு ரெகனிசன் (STAR) அகாடமியை இன்று தொடங்கி இருக்கிறோம். 18 சட்டமன்றத் தொகுதிகளில் 3 கோடி ரூபாய் செலவில், முதலமைச்சரின் சிறு விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கான அடிக்கல்லையும் நாட்டி இருக்கிறோம்.

7 கோடி ரூபாய் அளவிற்கு தஞ்சாவூர் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள `புதிய சின்தெடிக் அத்லெட்டிக் ட்ராக்' கையும் திறந்து வைத்து இருக்கிறோம். மதுரை மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 8 கோடியே 25 லட்சம் ரூபாய் செலவில் சின்தெடிக் அத்லெட்டிக் ட்ராக் விளையாட்டு வீரர்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலியில் மாவட்ட விளையாட்டு மைதானத்தில் 1 கோடியே 50 லட்சம் செலவில் சின்தெடிக் ஹாக்கி டப் மறு சீரமைப்பு செய்து வீரர்களின் பயன்பாட்டிற்காக இன்று வழங்கியுள்ளோம்.

கன்னியாகுமரியில் 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மார்சியல் ஆர்ட்ஸ் என்று சொல்லக்கூடிய பாரம்பரிய தற்காப்பு விளையாட்டுப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தை அமைப்பதற்காக இன்று அடிக்கல் நாட்டியுள்ளோம்.

### வேகமான வளர்ச்சி

நம் முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு, விளையாட்டுத் துறையில் தமிழ்நாடு இதுவரை இல்லாத அளவிற்கு மிகப் பெரிய வேகமான வளர்ச்சி அடையச் செய்திருக்கிறது. அதற்கு ஒரு சிறிய புள்ளிவிவரத்தை உதாரணமாகச் சொல்ல விரும்புகிறேன். சென்ற ஆட்சியாளர்களின் காலத்தில் 2011ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு வரை உள்ள 10 வருடத்தில் வெறும் 348 கோடி ரூபாய் அளவிற்கு மட்டும்தான் விளையாட்டுத்துறை சார்ந்த உள்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டன. ஆனால், முதலமைச்சர் தலைமையிலான நம் ஆட்சியில் இந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 545 கோடி ரூபாய் அளவிற்கு உள்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இது அவர்களைவிட நான்கு மடங்கு அதிகம்.

### ஊக்குவிக்கின்ற பணி

விளையாட்டிற்கான ஆற்றல் தமிழ்நாட்டிலுள்ள எந்த மூலையில் இருந்தாலும், கண்டறிந்து ஊக்குவிக்கின்ற பணியை நம் அரசு மேற்கொண்டு வருகிறது. முன்பெல்லாம் மாவட்டத் தலைநகரில்தான் மைதான வசதி இருக்கும். மாணவர்கள், விளையாட்டு வீரர்கள் பயிற்சி பெற வேண்டும் என்றால், மாவட்டத் தலைநகருக்குச் செல்ல வேண்டும். இந்த சிரமத்தைப் புரிந்துகொண்ட நம் முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் ஒரு மினி ஸ்டேடியம் இருக்கும் என்ற அறிவிப்பை வெளியிட்டார். ஒவ்வொரு மினி ஸ்டேடியமும் தலா 3 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.

அந்தந்தப் பகுதிகளில் பிரபலமாக இருக்கின்ற விளையாட்டு என்ன என்று அறிந்து குறைந்தது 5 விளையாட்டுகளுக்கான வசதிகளுடன் இந்த மினி ஸ்டேடியங்கள் அமைக்கப்படுகின்றன. முதற்கட்டமாக 10 ஸ்டேடியத்தை முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். அதில் 4 தொகுதிகளில் மினி ஸ்டேடியங்கள் ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்டு, இப்போது விளையாட்டு வீரர்கள் பயன்படுத்திக்கொண்டு வருகிறார்கள். அதேபோல் சென்ற ஆண்டு 21 மினி ஸ்டேடியங்கள் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். அவற்றில் இன்றைக்கு 18 மினி ஸ்டேடியத்திற்கான பணிகளை நாம் தொடங்கி இருக்கிறோம்.

### 40 மினி ஸ்டேடியங்கள்

நான் சமீபத்தில் சட்டமன்றத்தில் அறிவித்தேன். இந்த வருடம் 40 மினி ஸ்டேடியங்களை நாம் கட்டி முடிப்போம் என்று சொல்லி இருக்கிறேன். அதற்கான பணிகளை விரைவில் ஆரம்பித்து, வருகின்ற 2026ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்குள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம். இதன் மூலம் தமிழ்நாட்டில் வெளியே தெரியாமல் இருக்கின்ற வீரர்களின் திறமைகள் எல்லாம் நிச்சயம் வெளிச்சத்திற்கு வரும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

ஏற்கனவே, களத்தில் உள்ள வீரர்களின் திறமையை வளர்த்தெடுப்பதும் மிக மிக முக்கியமான ஒரு பணி. அதற்காகத்தான் முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருதுகள் இன்று வழங்கப்பட இருக்கிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு நம் விளையாட்டுத் துறையைப் பற்றி பேசும்போது, முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுப் பேசினார். இருக்கின்ற துறைகளிலேயே விளையாட்டுத் துறைதான் இன்றைக்கு ஸ்டார் துறையாக விளங்கி வருகிறது என்று பெருமையாகச் சொன்னார். அவர் சொன்னதைப்போலவே இன்றைக்கு விளையாட்டுத்துறை சார்பாகவே, ‘ஸ்டார்’ எனும் திட்டத்தைத் தொடங்கி இருக்கிறோம்.

### 38 பயிற்சியாளர்கள் நியமனம்

இன்னும் நுணுக்கமாக சென்று, திறமையாளர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு தேவையான பயிற்சியினை அளிப்பதுதான் இந்தத் திட்டத்தின் ஒரே நோக்கம். அவர்களை சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்கச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்திற்காக, `ஸ்போர்ட்ஸ் டேலன்ட் அண்ட் ரெககனிசேசன் அகாடமி' (STAR) என்ற ஸ்டார் அகாடமியை இன்றைக்கு தொடங்கி இருக்கிறோம். இந்த அகாடமியின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்கள், வீராங்கனைகள் பயன்பெறுவார்கள். இந்த பயிற்சி மையங்களுக்கு புதிதாக 38 பயிற்சியாளர்களும் நியமனம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு விளையாட்டினைத் தேர்ந்தெடுத்து, அதில் கவனம் செலுத்த வேண்டும் என்று இந்த அகாடமி அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டு வரலாற்றில் எந்தக் காலத்திலும் விளையாட்டுத்துறை இவ்வளவு பெரிய வளர்ச்சியைக் கண்டதில்லை. இத்துடன் இன்னொரு முக்கியமான முயற்சியையும் நம் விளையாட்டுத்துறை எடுத்துள்ளது.

பாரம்பரிய தற்காப்பு விளையாட்டுகளுக்கான பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் ஒன்று கன்னியாகுமரியில் அமைக்கப்படுகிறது. இதற்காக 12 லட்சம் ரூபாய் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. பாரம்பரிய தற்காப்புக் கலைகளை உயிர்ப்புடன் வைத்திருக்கும் நோக்கத்திற்காக இந்த மையம் உருவாக்கப்படுகிறது.

### கால்பந்து மைதானம்

தஞ்சாவூரில் ஒரு சின்தெடிக் அத்லெடிக் ட்ராக், அத்லெடிக் ட்ராக் மட்டும் கிடையாது, உயர்கோபுர மின் விளக்குகள், இயற்கை புல்வெளி, கால்பந்து மைதானம் என மிகச்சிறப்பாக அமைந்துள்ள சின்தெடிக் ட்ராக் மக்களின் பயன்பாட்டிற்கு இன்று கொண்டுவரப்படுகிறது. சென்னையில் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் நம் அரசு விளையாட்டிற்கான கட்டமைப்பைப் பரவலாக்கி வருகிறது. குறிப்பிட்ட பகுதியில் மட்டுமின்றி, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களில் இருந்தும் விளையாட்டு வீரர்கள் வருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

### எப்போதுமே துணை நிற்கும்

விளையாட்டுத் துறை கட்டமைப்பை மட்டும் நம் அரசு உருவாக்கவில்லை. விளையாடுவதற்கு செல்வதற்கு முன்பே தமிழ்நாடு சாம்பியன்ஸ் பவுண்டேசன் மூலமாக நாம் நிதியுதவி தருகிறோம். அவர்கள் வெற்றிபெற்று திரும்பி வரும்போதும் அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை தருகிறோம்.

விளையாட்டுத்துறையைத் தேர்ந்தெடுத்தாலும் வேலைவாய்ப்பைப் பெறலாம் என்பதை எடுத்துச் சொல்ல, 3 சதவிகித இட ஒதுக்கீட்டின் மூலம் சென்ற ஆண்டு மட்டும் 100 வீரர்களுக்கு அரசு வேலைகளை வழங்கி இருக்கிறோம். அதேபோல இந்தாண்டும் 25 மாற்றுத்திறனாளி வீரர்கள் உட்பட 100 பேருக்கு வேலை வாய்ப்பை வழங்குவோம் என்ற உறுதியினைக் கொடுத்திருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, முன்னாள் மற்றும் இயற்கை எய்திய வீரர்களின் குடும்பத்தாருக்கு ஓய்வூதிய ஆணையை வழங்க இருக்கிறோம். ஓய்வூதிய விண்ணப்பங்களின் மீது மூன்று மாதங்களுக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நம் முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தி இருக்கிறார். அதன்படிதான் இன்றைக்கு ஓய்வூதிய ஆணைகளை வழங்க இருக்கிறோம். ஆகவே, நம் அரசு எல்லா வகையிலும் விளையாட்டு வீரர்களான உங்களுக்கு எப்போதுமே துணை நிற்கும்.

இனி உங்களின் கடமை என்னவென்றால், இந்த வாய்ப்புகள், இந்தத் திட்டங்களை யெல்லாம் பயன்படுத்தி, உங்களின் திறமையை நீங்கள் மென்மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும். உலக அளவில் புகழ்பெற்ற கைப்பந்து வீரர் மைக்கல் ஜார்டன் பற்றி உங்களுக்குத் தெரியும். அவரின் வெற்றிகளை மட்டுமே நீங்கள் பார்த்திருப்பீர்கள். ஆனால், அவரின் வெற்றியைப் பற்றி அவர் குறிப்பிட்டது என்னவென்றால், ``நான் 9 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சாட்ஸை தவற விட்டிருக்கிறேன். 300க்கும் மேற்பட்ட போட்டிகளில் தோல்வி அடைந்து இருக்கிறேன். 26 முறை போட்டியின் வெற்றியை தீர்மானிக்கின்ற டிசைடிங் சாட்ஸை தவற விட்டிருக்கிறேன். நான் பலமுறை வெற்றி வாய்ப்பை இழந்து இருக்கிறேன். அதனால் தான் இப்போது உங்கள்முன் வெற்றியாளனாக இருக்கிறேன்” என்று சொன்னார் மைக்கேல் ஜார்டன் அவர்கள்.

எனவே, நீங்கள் வாங்குகின்ற பதக்கங்களை மட்டும் கணக்கிட்டு உங்களின் வெற்றியைத் தீர்மானிக்கக் கூடாது. உங்களின் முயற்சிகளையும் சேர்த்துத்தான் உங்களின் வெற்றியைக் கணக்கிட வேண்டும். உங்களின் அனைத்து வகையான முயற்சிகளுக்கும் நம் அரசு என்றென்றும் துணை நிற்கும். அதையெல்லாம் நீங்கள் பயன்படுத்திக்கொண்டு சாதனை மேல் சாதனைகளைப் படைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உங்கள் அனைவருக்கும் மீண்டும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா ஐ.ஏ.எஸ்., விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் துணைத் தலைவர்கள் அசோக் சிகாமணி, ராமச்சந்திரன், விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயளர் மேக்நாத் ரெட்டி ஐ.ஏ.எஸ்., விளையாட்டு மேம்பாட்டு ஆணைய பொது மேலாளர் சுஜாதா, எஸ்.டி.ஏ.டியின் டி.ஆர்.ஓ மணிகண்டன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

---

## தஞ்சாவூர் – மதுரை – திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு வளாகங்களில்

# நவீன விளையாட்டு கட்டமைப்புகள் - ‘ஸ்டார்’ அகாடமிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார் ! 39 பேருக்கு ‘முதலமைச்சர் மாநில விளையாட்டு விருதுகள்’ வழங்கினார்!

**சென்னை, மே.7 -**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு வளாகங்களில் மொத்தம் 16.73 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நவீன விளையாட்டு கட்டமைப்புகள் மற்றும் அனைத்து மாவட்ட விளையாட்டு அலுவலகங்களில் மொத்தம் 3.68 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள ஸ்டார் அகாடமிகளைத் திறந்து வைத்து, தலா 3 கோடி ரூபாய் வீதம் மொத்தம் 54 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 18 முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கங்கள் கட்டும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 39 நபர்களுக்கு முதலமைச்சர் மாநில விளையாட்டு விருதுகளை வழங்கினார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.5.2025) நேரு விளையாட்டரங்கம் சென்னை ஒலிம்பிக் அகடமியில் நடைபெற்ற விழாவில், தஞ்சாவூர் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள செயற்கை இழை ஓடுதளப் பாதை மற்றும் இயற்கை புல்வெளி கால்பந்து மைதானம், மதுரை மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 8.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மறுசீரமைக்கப்பட்டுள்ள செயற்கை இழை ஓடுதளப் பாதை மற்றும் இயற்கை புல்வெளி கால்பந்து மைதானம், திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 1.48 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மறுசீரமைக்கப்பட்டுள்ள செயற்கை இழை வளைகோல் பந்து மைதானம், ஆகியவற்றைத் திறந்து வைத்தார்.

தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் உள்ள திறமையான விளையாட்டு வீரர், வீராங்கனைகளை தேசிய, சர்வதேச அளவிலான போட்டிகளில் பங்கேற்க செய்வதற்காக அனைத்து மாவட்ட விளையாட்டு அலுவலகங்களில் மொத்தம் 3.68 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் ஸ்டார் (STAR SPORTS TALENT AND RECOGNITION ACADEMY) அகடமி மற்றும் பாரம்பரிய இந்திய தற்காப்பு கலை விளையாட்டை ஊக்குவித்து, பண்டைய கலைகளை பாதுகாத்து மேம்படுத்த கன்னியாகுமரி மாவட்டத்தில் 11.83 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள பாரம்பரிய தற்காப்பு விளையாட்டு பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்.

மேலும், காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர், செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம், திருவண்ணாமலை மாவட்டம் கலசபாக்கம், கீழ்பென்னாத்தூர், சேலம் மாவட்டம் மேட்டூர், ஆத்தூர், மதுரை மாவட்டம் உசிலம்பட்டி, மேலூர், கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி, தருமபுரி மாவட்டம் பென்னகரம், நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேலூர், நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம், திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம், ஆத்தூர், தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம், திருப்பூர் மாவட்டம் தாராபுரம், இராமநாதபுரம் மாவட்டம் இராமநாதபுரம், ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி ஆகிய 18 சட்டமன்றத் தொகுதிகளில், தலா 3 கோடி ரூபாய் வீதம் மொத்தம் 54 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கங்கள் கட்டும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில், தலைசிறந்து விளங்கிய விளையாட்டுத்துறை சார்ந்த நபர்களுக்கு முதலமைச்சர் மாநில விளையாட்டு விருதுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 2020 21ம் ஆண்டில் 7 பிரிவுகளில் தலைசிறந்து விளங்கியதற்காக 2 வீரர், 2 வீராங்கனைகள், 2 பயிற்றுனர்கள், 2 உடற்கல்வி ஆசிரியர்கள், 1 நன்கொடையாளர், 1 ஒருங்கிணைப்பாளர் மற்றும் 1 விளையாட்டு நடுவருக்கும், 202122ம் ஆண்டில் 6 பிரிவுகளில் தலைசிறந்து விளங்கியதற்காக 2 வீரர், 2 வீராங்கனைகள், 2 பயிற்றுனர்கள், 2 உடற்கல்வி ஆசிரியர்கள், 1ஒருங்கிணைப்பாளர் மற்றும் 1 விளையாட்டு நடுவருக்கும், 202223ம் ஆண்டில் 5 பிரிவுகளில் தலைசிறந்து விளங்கியதற்காக 2 வீரர், 2 வீராங்கனைகள், 2 பயிற்றுனர்கள், 2 உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் 1 ஒருங்கிணைப்பாளருக்கும், 202324ம் ஆண்டில் 6 பிரிவுகளில் தலைசிறந்து விளங்கியதற்காக 2 வீரர், 2 வீராங்கனைகள், 2 பயிற்றுனர்கள், 1 உடற்கல்வி ஆசிரியர், 1 நன்கொடையாளர், மற்றும் 1 ஒருங்கிணைப்பாளர் என மொத்தம் 39 நபர்களுக்கு முதலமைச்சர் மாநில விளையாட்டு விருதுகளையும், இதில் 31 நபர்களுக்கு தலா 1 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும் துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

நலிந்த நிலையில் உள்ள 21 முன்னாள் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ஒய்வூதிய ஆணை மற்றும் ஒய்வூதியம் பெற்று வந்து மரணமடைந்த 5 பயனாளிகளின் வாரிசாதாரருக்கு குடும்ப ஓய்வூதிய ஆணை மற்றும் நிலுவை தொகையாக ரூ. 8.99 லட்சத்திற்கான காசோலைகளையும் துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் காணொலிக் காட்சி வாயிலாக அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துணைத் தலைவர்கள் என்.ராமச்சந்திரன், அசோக் சிகாமணி, முதலமைச்சர் விளையாட்டு விருதாளர்கள், விளையாட்டு வீரர், வீராங்கனை கள், பயிற்றுநர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.